### பல்வேறு திட்டங்களுக்கான நிதியை விடுவிப்பதில்

# ஒன்றிய அரசு கடுமையான நிபந்தனைகளை நீக்க வேண்டும்!

## ஜெய்சால்மரில் ஒன்றிய அரசின் வரவு-செலவு திட்டக் கூட்டத்தில் - நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

ஜெய்சால்மர், டிச. 22-
தமிழ்நாட்டில் திட்டப்படும் பல்வேறு திட்டங்களுக்கான நிதியை விடுவிப்பதில் ஒன்றிய அரசு கடைபிடித்து வரும் கடுமையான கட்டுப்பாடுகளையும், கூடுதலான நிபந்தனைகளையும் ஒன்றிய அரசு நீக்க வேண்டும் என்று ஜெய்சால்மரில் ஒன்றிய அரசால் நடத்தப்பட்ட ஒன்றிய அரசின் வரவு - செலவுத் திட்டத்திற்கான முன்னோட்டம் குறித்த கூட்டத்தில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்.

ஜெய்சால்மரில் ஒன்றிய அரசால் நடத்தப்பட்ட ஒன்றிய அரசின் வரவு-செலவுத் திட்டத்திற்கான முன்னோட்டம் குறித்த நிதியமைச்சர் தங்கம் தென்னரசு ஆற்றிய உரை வருமாறு:

நீண்டகாலமாக நிலுவையில் இருந்த சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டத் திட்டப் பணிக்கு ஒப்புதல் அளித்த தற்காக, ஒன்றிய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்காக, மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்திலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளில் 26,490 கோடி ரூபாய் செலவிடப்பட்ட காரணத்தால், மாநிலத்தின் நிதிநிலைமை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு, இதர வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள ஏதுவாக, ஒன்றிய அரசு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு நடப்பு ஆண்டிற்கு 10,000 கோடி ரூபாயும், அடுத்த ஆண்டிற்கு 16,000 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்ய வேண்டுமெனக் தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டது.

மதுரை மற்றும் கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டங்களுக்கும் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

பல்வேறு திட்டங்களுக்கான நிதியை விடுவிப்பதில் ஒன்றிய அரசு கடைப்பிடித்துவரும் கடுமையான கட்டுப்பாடுகளையும், கூடுதலான நிபந்தனைகளையும் நீக்க வேண்டுமென்று ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக, ஒன்றிய அரசு, கோடிக்கணக்கான மக்களின் தேவைகளை நிறைவேற்றும்படியாக, மாநில அரசுகளுடன் கூட்டாக இணைந்து இத்திட்டங்களைச் செயல்படுத்த வகை செய்திட வேண்டும். ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் (Samagra Shiksha Abhiyaan) ஆண்டுப் பணித் திட்டத்திற்கு, திட்ட ஒப்புதலளிப்பு வாரியம் (PAB) அனுமதித்துள்ள 2,152 கோடி ரூபாயை ஒன்றிய அரசு விடுவிக்காமல் உள்ளது. இந்த நிதி, ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் கல்வி உரிமைச் சட்டத்தை (RTE) நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட பள்ளிகளின் செயல்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

இந்நிதியை விடுவிக்காத தன் காரணமாக, மாநில அரசு முழுச் செலவையும் ஏற்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளதுடன், மாநிலத்தின் நிதி நிலைமையும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் (Samagra Shiksha Abhiyaan) கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதியை ஏனைய இதர நிபந்தனைகளுடன் இணைக்காமல் உடனடியாக விடுவிக்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி கோரிக்கை முன்வைக்கப் பட்டது. 44 இலட்சம் மாணவர்கள், 2.2 இலட்சம் ஆசிரியர்கள் மற்றும் 21,276 பணியாளர்களின் எதிர்காலம் ஒன்றிய அரசு உரிய காலத்திற்குள் மேற்கொள்



ளும் நடவடிக்கைகளையே சார்ந்துள்ளது.

**புயலால் தமிழ்நாடு பாதிப்பு!**

புயல், கனமழை மற்றும் வரலாறு காணாத வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களால் தமிழ்நாடு தொடர்ச்சியான சவால்களை எதிர்கொண்டு வருகிறது. அண்மையில், ஃபெஞ்சல் புயலால் மாநிலம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இப்புயலானது, 14 மாவட்டங்களை பாதித்துள்ளதுடன், மக்களின் உயிர், அவர்களின் வாழ்வாதாரங்கள் மற்றும் உட்கட்டமைப்புகளுக்கு குறிப்பிடத்தக்க சேதத்தை ஏற்படுத்தி சென்றுள்ளது. இத்தகைய கடுமையான வானிலை நிகழ்வுகளின் எண்ணிக்கையும், அவற்றின் தீவிரமும் தொடர்ந்து அதிகரித்து வருவதால், ஆண்டு முழுவதற்குமான ஒட்டுமொத்த மழைப்பொழிவை சில பகுதிகள் 24 மணி நேரத்திலேயே பெறுகின்றன. திட்ட மிடுவதிலும், முன்னேற்பாடு உள்ளிட்ட பணிகளிலும் மாநிலம் சீரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதிலும், இத்தகைய ஒழுங்கற்ற கால நிலை தன்மை, கணிசமான நிதி நெருக்கடியை ஏற்படுத்துவதுடன், மாநில நிதி நிலைமையையும் பாதிக்கின்றது. மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்தில் (SDRF) உள்ள நிதியானது, உடனடி நிவாரணம் மற்றும் நீண்ட கால மறுசீரமைப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்குப் போதுமானதாக இல்லை. எனவே, ஃபெஞ்சல் புயலிற்குப் பின்னர், தற்காலிக மற்றும் நிரந்தர நிவாரணம் மற்றும் மறுசீரமைப்புத் தேவைகளை மேற்கொள்வதற்கு தேசியப் பேரிடர் நிவாரண நிதி யிலிருந்து (NDRF) 6,675 கோடி ரூபாயை விடுவிக்க வேண்டுமென ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப்பட்டது.

**ரயில் திட்டங்களுக்கான அனுமதி!**

மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக தொழிற்பகுதிகளில் புதிய இரயில் தடங்கள் அமைப்பதற்கான தேவை உள்ளது. வரவிருக்கும் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு பின்வரும் இரயில் திட்டங்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது:

தாம்பரம் மற்றும் செங்கல்பட்டிற்கு இடையே 4-வது இருப்புப்பாதை வழித்தடம்.

திருப்பத்தூர் - கிருஷ்ணகிரி - ஓசூர் புதிய இருப்புப்பாதை வழித்தடம்.

அருப்புக்கோட்டை வழியாக மதுரை - தூத்துக்குடி (143.5 கி.மீ.) இருப்புப்பாதை வழித்தடம்.

மீஞ்சூர் - திருவள்ளூர் - ஸ்ரீபெரும்புதூர் - ஒரகடம் - சிங்கப்பெருமாள்கோயில் - மதுராந்தகம் இருப்புப் பாதை வழித்தடம்.

சேலம் - ஓசூர் - பெங்களூரு மற்றும் கோயம்புத்தூர் - எர்ணாகுளம் நீட்டிப்புகளுடன் கூடிய சென்னை - சேலம் - கோயம்புத்தூர் ஆகிய இடங்களை இணைக்கும் மிதவேக இருப்புப்பாதை வழித்தடம்.

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை அதிகரிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது. அத்தகைய திட்டங்களில் ஒன்றாக, தாம்பரம் மற்றும் செங்கல்பட்டுக்கு இடையேயான உயர்மட்டச் சாலை

(NH-32) மற்றும் செங்கல்பட்டிலிருந்து திண்டிவனம் வரையிலான சாலை அமைப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். 2005-ஆம் ஆண்டில் சென்னை - கன்னியாகுமரி வழித்தடத் திட்டம், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) நான்குவழி நெடுஞ்சாலையாக மேம்படுத்தப்பட்டது. தற்போது, போக்குவரத்து வாகனங்கள் பன்மடங்கு அதிகரித்து, சாலை விபத்துகளால் கடுமையான பாதிப்புகளும் உயிரிழப்புகளும் ஏற்பட காரணமாக உள்ளது. இந்தத் திட்டத்திற்கு, வரும் நிதிநிலை அறிக்கையில் போதுமான நிதியை ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டும்.

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

## வலைதளங்களில் வலம் வருவது!




குறள், வகுப்பறையில் மட்டும் அல்லாமல் உங்கள் இல்லங்களில் மட்டும் அல்லாமல் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

### உயர்கல்வியில் தமிழ்நாடு முதலிடம் என்பதை சீர்குலைக்க முயற்சிக்கிறார்!

# தமிழ்நாட்டில் அரசியல் செய்வதை ஆளுநர் நிறுத்த வேண்டும்!

## புதுக்கோட்டையில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேட்டி!

புதுக்கோட்டை, டிச.22-
உயர் கல்வித் துறையில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற நிலையை எட்டியுள்ளோம் இதை சீர்குலைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஆளுநர் தொடர்ந்து உயர்கல்வி துறையின் பணியில் அரசின் பணியில் குறுக்கிட்டு இடர்பாடு உருவாக்க வேண்டும் என்பதற்காக கருத்து தெரிவித்து வருகிறார் என்று புதுக்கோட்டை யில் தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்கோட்டையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தந்த தமிழ்நாடு உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் புதுக்கோட்டை ரோஜா இல்லம் என்ற விருந்தினர் மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தரை நியமிக்க கூடிய தேடுதல் குழுவில் மூன்று நபர்களை முறையாக சரியாக அரசின் விதிப்படியும் பல்கலைக்கழகத்தின் விதிப்படியுப் தான் நியமித்தோம்.

**ஆளுநர் பொறுப்பிற்கு அழகல்ல!**

தன்னுடைய எல்லை என்ன எதில் தலையிட வேண்டும் எதில் தலையிடக்கூடாது என்ற நிலை தெரியாத ஆளுநர் அதை கண்டித்து இருப்பதும், யுஜிசி தேர்வு செய்யக்கூடிய உறுப்பினர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறி நான்காவது உறுப்பினரை எங்கள் தலையில் சுமத்தி உள்ளது ஆளுநர் பொறுப்புக்கு அழகல்ல.

இதுவரை தமிழ்நாடு முதலமைச்சர் மாநில உரிமைகளை கட்டி காப்பதில் ஒன்றிய அரசோடு பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒன்றுபட்டு இந்தியாவை உருவாக்கி பல்வேறு மாநிலங்களுக்கு குரல் கொடுத்து வருகிறார்.

உயர்கல்வியை பொருத்த வரை பல்கலைக்கழகங்களுடைய செயல்பாடு தமிழ்நாடு அரசு விரும்பி பல்கலைக்கழக பேராசிரியர்கள் மாணவர்கள் நலன் காப்பதில் அக்கறையுடன் முதலமைச்சர் செயல்படுகிறார்.

**தமிழ்நாடு முதலிடம்!**

திமுக அரசு அமையும் போதெல்லாம் உயர் கல்வித் துறையில் அக்கரை காட்டிய காரணத்தினால் தான் முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலிருந்து இன்று வரை உயர் கல்வித் துறையில் இந்தியாவி லேயே முதல் மாநிலம் தமிழ்நாடு என்ற நிலையை எட்டியுள்ளோம். இதை சீர்குலைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் ஆளுநர் தொடர்ந்து உயர்கல்வி துறையின் பணியில் அரசின் பணியில் குறுக்கிட்டு இடர்பாடு உருவாக்க வேண்டும் என்பதற்காக கருத்து தெரிவித்து வருகிறார். அதனால்தான் ஆளுநர் அறிக்கை மறுப்பு தெரிவித்து நேற்றைய தினம் ஆளுநர், ஆளுநர் பணியை பார்க்க வேண்டும் அண்ணாமலை பணியை பார்க்க வேண்டாம் என்று கருத்து தெரிவித்தோம்.

தமிழ்நாடு அரசை பொருத்தவரை ஆளுநரின் குறுக்கீடுகளை அவ்வப்போது அறிக்கையின் மூலமாக நாங்கள் அனுப்புகின்ற கோப்புகளின் மூலமாகவும் நிரூபித்து வருகிறோம். இதன் பிறகு ஆளுநர் தன் நிலையை தொடர்ந்தால் தமிழ்நாடு முதலமைச்சரு டன் கலந்து பேசி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் சட்ட ரீதியான அவரது செயல்பாடுகளை வரையறுக்க வேண்டிய கட்டம் தமிழ்நாடு அரசுக்கு வரும் அந்த கட்டத்தை அவர் எட்டாமல் இருப்பது அவர் பதவிக்கு அழகு.

தமிழ்நாட்டை திருச்சி கோவை சென்னை மதுரை என நான்கு மண்டலங்களாக பிரித்து அனைத்து நிலையிலான துறை தலைவர்கள் பேராசிரியர்கள் முதல்வர்கள் மற்றும் பல்கலைக்கழகத்துடைய சிறப்பு கல்வி வல்லுனர்கள் பொறியியல் கல்லூரியுடைய சிறப்பு வல்லுநர்கள் பேராசிரியர்கள் நான் டீச்சிங் ஸ்டாப் பெற்றோர்கள் விடுதி மாணவர்கள் 7.5% படிக்கக்கூடிய மாணவர்கள் நான் முதல்வன் திட்டத்தில் படிக்கக்கூடிய மாணவர்கள் புதுமைப்பெண் திட்டத்தில் படிக்கக்கூடிய மாணவர்கள் மாற்றுத்திறனாளி மாணவர்கள் தமிழ் புதல்வன் மாணவர்கள் என ஒவ்வொரு பிரிவாக நாள் முழுவதும் உயர் கல்வி துறை செயலாளர்கள் ஆறு ஐஏஎஸ் அதிகாரிகளோடு நானே உடனிருந்து மாநிலம் முழுவதும் கோரிக்கைகளை பெற்று வந்திருக்கின்றோம். அந்த அடிப்படையில் புதிய கல்வி திட்டங்கள் சேர்க்கப்பட வேண்டும் பயனற்ற கல்வி திட்டங்கள் நீக்கப்பட வேண்டும் வேலை வாய்ப்பு கூறிய புதிய பாட முறைகள் புகுத்தப்பட வேண்டும் என்பது எல்லாம் நாங்கள் கள ஆய்வு செய்யும் பொழுது கண்டறிந்துள்ளோம் அதையெல்லாம் முதல் அமைச்சரிடம் எடுத்துச் சொல்லி வரும் கல்வி ஆண்டில் புதுத்துறைகளை உருவாக்குவது வேலை வாய்ப்புகளை ஊக்கப்படுத்துவது வெளிநாட்டில் இருக்கக்கூடிய நிறுவனங்களோடு இணைந்து மாணவர்களுக்கு பயிற்சி தந்து வேலை தருவது முதலமைச்சருடைய நோக்கம் எண்ணம் எல்லாம் இந்தியாவில் இருக்கக்கூடிய பிற மாநிலங்களை தமிழ்நாடு ஒப்பிட்டு பார்க்காதீர்கள் உத்திர பிரதேசம் பீகார் என்று அகில இந்தியாவில் இருக்கின்ற உலக அளவில் இருக்கின்ற நாடுகளோடு ஒப்பிடுங்கள் என்று அறிவுரை வழங்கி உள்ளார்.

தமிழ்நாடு சீனாவை போல் ஜப்பானை போல் தைவானை போல் எட்டக்கூடிய சூழ்நிலையை உருவாக்க பெரு முயற்சி எடுத்து வருகிறோம் அதற்கான கல்வி திட்டம் உருவாக்கப்படும்.

கல்லூரியுடைய பாடத்திட்டங்கள் மாணவர்களுக்கு நலம் பெற வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் 2,000 கௌரவ விரிவுரையாளர்களை நியமித்துள்ளார். அடுத்து 750 பேருக்கு மேலாக கௌரவ விரிவுரையாளர்களை நியமிக்க இருக்கின்றோம். அதைத்தொடர்ந்து வரும் ஜூன் மாதத்திற்குள் நான்காயிரம் பணியிடங்கள் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டு நிரந்தர பேராசிரியர்களை உருவாக்கக்கூடிய பெரு முயற்சியையும் எடுக்க தமிழ்நாடு முதலமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

**கௌரவ விரிவுரையாளர்களுக்கு ஊக்கத் தொகை அதிகரிப்பு!**

கடந்த 10 ஆண்டுகளில் கௌரவ விரிவுரையாளர்களுக்கு அதிமுக ஊதியத் தொகை 10,000 ரூபாய் மட்டுமே கூடுதலாக கொடுத்தார்கள். குறிப்பாக பத்தாயிரம் வாங்கியவர்களுக்கு 20,000 ரூபாயாக உயர்த்தினர். ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற ஒன்றரை ஆண்டுகளுக்கு உள்ளாகவே 5,000 ரூபாயை அவர்களுக்கு உயர்த்தி வழங்கி உள்ளார். இதன் மூலம் அரசுக்கு பல பணச்சுமை கூடுதல் செலவு இருந்தாலும் கூட பேராசிரியர்கள் நலம் காப்பதில் அக்கறையுடன் இருக்கக்கூடிய முதல மைச்சர் தமிழ்நாடு முதலமைச்சர். பத்தாண்டுகளில் அதிமுக 10 ஆயிரம் ரூபாய் கொடுத்தது அதை ஒன்றரை ஆண்டுகளில் 5000 ரூபாயை விருத்தியுள்ளார் இதுவே பேராசி ரியர்கள் மீது முதலமைச்சர் காட்டுகின்ற அக்கறையில் அடையாளம் என்று பேட்டி அளித்தார்.

### சட்டமேதை அண்ணல் அம்பேத்கரை அவமதித்த

# ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்!

## அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் கண்டன அறிக்கை!

சென்னை, டிச.22 -
ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேச்சுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் சா.அருணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

நாடாளுமன்றத்தில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அம்பேத்கர் அம்பேத்கர் என உச்சரிப்பது இப்போது பேஷனாகிவிட்டது என கிண்டலாக பேசி அம்பேத்கர் அம்பேத்கர் என தெரிவிப்பதற்கு பதில் கடவுள் பெயரை சொல்லி இருந்தால் ஏழு ஜென்மத்திற்கும் புண்ணியமாவது கிடைத்திருக்கும் என பேசியிருப்பது பெரும் கண்டனத்திற்கு உரியது அம்பேத்கர் என்ற மாமனிதர் பிறக்கவி ல்லை என்றால் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் அமித்ஷா அவருடை மொழியில் சொல்ல வேண்டுமானால் புண்ணியம் கிடைத்திருக்காது , இன்று பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் மேலோங்கி நிற்பதை பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய அமைச்சர் அமித்ஷா போன்றோரால் சகித்துக் கொள்ள முடியவில்லை அரசியல் அமைப்பிலும் ஆட்சி அதிகாரத்திலும் அனைத்திலும் நம்மை காட்டிலும் மேலோங்கி வருகிறார்களே இதற்கெல்லாம் யார் காரணம் அம்பேத்கார் அவர்கள் தானே இந்த அரசியல் அமைப்பு சட்டம் தானே பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர் வகுத்த இட ஒதுக்கீடு தானே என்ற ஆதங்கம் அவரால் சகித்து கொள்ள முடியவில்லை அவர் அவருடைய ஆதிக்க குணத்தை இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

அம்பேத்கர் அரசியல் அமைப்பு சட்டத்தையும் இட ஒதுக்கீட்டையும் கொண்டுவரவில்லை என்றால் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலையை எண்ணிபார்க்கவே முடியாது இருக்கு , எல்லா நிலையிலும் உயர்ந்து நிற்கின்ற இந்நாளிலேயே ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்களின் மேலாதிக்க



ஆணவத்தோடு பேசுகிறார் என்றால் அந்த காலத்தில் அண்ணல் அம்பேத்கர் தந்தை பெரியார் எந்த அளவிற்கு மேலாதிக்க சக்திக்களோடு போராடி இருப்பார்கள் என்பதை நினைத்தால் நெஞ்சு பதைபதைக்கிறது

அனைத்துத் துறைகளிலும் மேலோங்கி நிற்கிறோம் என்பதை சகித்துக்கொள்ள முடியாத அமைச்சர் அமித்ஷா ஆணவத்தோடு பேசி இருக்கிறார் அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவாக பேசியதால் அண்ணலின்புகழ் எந்த காலத்திலும் அழிந்து விடாது,அமித்ஷா அவர்களுக்கு ஒன்றை சொல்லிக் கொள்கிறோம் அண்ணல் அம்பேத்கர் தான் எங்கள் எண்ணத்திலும் உள்ள த்திலும் உச்சரிப்பிலும் எப்போதும் அம்பேத்கர் அம்பேத்கர் என்று ஒலித்துக் கொண்டே தான் இருக்கும்

தமிழ்நாட்டின் முதலமைச்சர் கலைஞரின் மறு உருவம் என்பதை பறைசாற்றும் விதமாக அண்ணல் அம்பேத்கரை ஒன்றிய அமைச்சர் இழிவாக பேசியதை கண்டித்து இந்தியாவின் முதல் குரலாக தன் கண்டனத்தை பதிவு செய்தது இல்லாமல் தமிழ்நாட்டில் தன் இயக்கம் சார்பாக தமிழ்நாடு முழுவதும் போராட்டங்களை முன்னெடுத்து ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவர் என்பதற்கு இதைவிட சான்று வேறு என்ன சொல்ல முடியும் தொடர்ந்து ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள் மன்னிப்பு கேட்க வலியுறுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் சமத்துவத்தை நிலை நாட்டி வரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் , பெரும் போராட்டத்தை முன்னெடுத்து வரும் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்

மேலும் சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கரை இழிவாக பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்களை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன் மேலும் இழிவாக பேசியதை திரும்ப பெற்று பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.




புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேக் தாவூது
### டிசம்பர் 22 (1996)



கல்லூரியில் படிக்கும் போதே தி.மு.க.வில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். மாணவர்கள் சார்பில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தி சிறை சென்றவர்.

பிரிக்கப்படாத நெல்லை மாவட்டத்தின் மாணவர் அணி இணைச் செயலாளராகவும், நெல்லை மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர் நெல்லை மாவட்ட மாணவர் அணிச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

1991ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது நெல்லையில் மாபெரும் போராட்டத்தையும், அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற ஊழலை எதிர்த்து தளபதி அவர்கள் தலைமையில் நெல்லையில் மாபெரும் போராட்டத்தையும் நடத்தியவர்.

“மாணவர் அணியின் கழகக் கண்மணியாக – என் மனங்கவர்ந்த மாணிக்க மணியாக – மாநிலத் துணை அமைப்பாளராக மாணவர் படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்திட்ட தியாகச்சுடரே – கள்ளமிலாத் தம்பி! என்றும் என் நினைவில் வாழ்வாய்” என்று தலைவர் கலைஞர் அவர்கள், சேக் தாவூது மறைந்த போது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**